செ.வெ.எண்-74

நாள்-31-03-2017

## பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் 01.04.2017 தேதி முதல் நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட உள்ளது. முதற்கட்டமாக சங்கரன்கோவில், பாளையங்கோட்டை, கடையநல்லூர் ஆகிய வட்டங்களில் வழங்கப்பட உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு 45 ஆயிரம் ஸ்மார்ட் கார்டு அச்சிட்டு வரப்பெற்றுள்ளது. மீதமுள்ள வட்டங்களுக்கும் படிப்படியாக ஸ்மார்ட் கார்டு பெறப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஸ்மார்ட் அச்சிடப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு ஸ்மார்ட் கார்டு பெறுவதற்கான OTP நம்பர் POS மெஷினில் பதிவு செய்த மொபைல் எண்ணிற்கு வந்தடையும்.

இந்த OTP நம்பரை-ஐ கொண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் உங்கள் அருகில் உள்ள ரேஷன் கடைகளில் அல்லது அவர்கள் அறிவிப்பு செய்யும் மையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

ஆகையால் தங்களது மொபைல் எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) வந்தால் அழித்துவிட வேண்டாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

கார்டுதாரர்களுக்கு வழங்கப்படும் OTP 7 நாள் செல்லுபடியாகும். எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது மொபைல் போனிற்கு OTP வந்த ஏழு நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கு சென்று தங்களது ஸ்மார்ட் கார்டை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி.
நாள்: 31 .03.2017.

வெளியிட
மக்கள் தொடர்பு அலுவலர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,